சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP NO. **302 / 2019**

பெயர்: ஹரிகரன் எ.ம.சா. 1 தேதி **15.07.2025**

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் ஆவணத்தின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. புலன் விசாரணை அதிகாரி கொடுத்த அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முதல் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு ஆக்ட் பாலிசி உள்ளது. மேற்படி பாலிசியில் யார் யாருக்கு தான் இழப்பீடு கொடுக்கவேண்டும் என்றால் மூன்றாம் நபருக்கு மட்டுமே இழப்பீடு கொடுக்கவேண்டும். விபத்தில் அடிபட்டு இறந்தநபர் வாகனத்தின் பின்புறம் அமர்ந்து பயணம் செய்தார் என்றால் சரிதான். மேற்படி வாகனத்தில் பின்இருக்கையில் அமர்ந்து பயணம் செய்த நபர் மூன்றாம் நபர் என்றால் சரியல்ல. விபத்தில் காயம்பட்ட நபர் மூன்றாம் நபர் என்பதால் மனுதாரருக்கு எங்களது நிறுவனம் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இழப்பீடு கொடுப்பதில் இருந்து தப்பிப்பதற்காக தான் நீதிமன்றத்தில் தவறான காரணங்கள் சொல்லி முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.